ஆண்டு பட்டிகை வழக்கு எண்.196/2025

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

Case No CC.No. 196/2025 LW– 10 PW– 5

Name : சிவராமகிருஷ்ணன் (புலன் விசாரணை அதிகாரி)

Father's/Husband's Name : சொக்கலிங்கம்

Village : தாடிக்கொம்பு காவல் நிலையம் (காவல் ஆய்வாளர்)

Taluk : திண்டுக்கல்

District : திண்டுக்கல் மாவட்டம்

Age : 47/2026

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 8th day of April 2026

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம், தாடிக்கொம்பு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.10.2025ம் தேதி 17.00 மணிக்கு நத்தம் காவல் நிலைய ஆய்வாளராக பணிபுரிந்தபோது நத்தம் தாலுகா, பரளிபுதூர், வேம்பரளியைச் சேர்ந்த லெட்சுமணன் மனைவி அடைக்கம்மாள் என்பவர் காவல் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று நத்தம் காவல் நிலைய கு.எண்.454/2025 சட்டப்பிரிவுகள் 281, 106(1) BNS வழக்காக பதிவு செய்தேன். (**முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. பின்பு நான் இந்த வழக்கை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடமான நத்தம் – மதுரை பைபாஸ் ரோடு விளாம்பட்டி பிரிவு அருகே சென்று சம்பவ இட சாட்சிகள் பிரபு மற்றும் வீரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி

வரைபடம் தயார் செய்தேன்.(**அந்த மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ–5 ஆகவும், பார்வை மகஜர் அ.த.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**) பின்னர் பட்டியல் சாட்சிகளான அடைக்கம்மாள், மாணிக்கம், குருந்தன், வெள்ளிமலை ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையில் சம்பவம் உண்மை என தெரியவந்த நிலையில் இவ்வழக்கின் எதிரியான பாலாஜி என்பவரை தேடி வந்தேன்.

3. பின்னர் மறுநாள் 05.10.2025ம் தேதி வாகன விபத்தில் இறந்த நபரான லெட்சுமணன் என்பவரது பிரேதத்தை பஞ்சாயத்தார் முன்னிலையில் நத்தம் அரசு மருத்துவமனையில் பிரேத விசாரணை செய்தேன். (**பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.7ஆக குறியீடு செய்யப்படுகிறது**) பின்னர் பிரேத பரிசோதனை அலுவலாக தலைமை காவலர் 1763 டோம்னிக் என்பவரை நியமித்தேன். (**லெட்சுமணன் என்பவரது பிரேத பரிசோதனை வேண்டுகோள் கடிதம் அ.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) இந்நிலையில், 07.10.2025ம் தேதி இவ்வழக்கின் எதிரியான பாலாஜி, த/பெ.செல்வராஜ், குமரன்திருநகர், பாலகிருஷ்ணாபுரம், திண்டுக்கல் என்பவர் நத்தம் காவல் நிலையத்தில் ஆஜரானவரை கைது செய்து தக்க இருநபர் ஜாமீனில் விடுவித்தேன்.

4. மேலும் அன்றையதினமே எதிரி பாலாஜி ஓட்டி வந்த 4 சக்கர வாகனமான TN 57 CA 7683 என்ற பதிவெண்கொண்ட மகேந்திரா XUV என்ற காரை மோட்டார் வாகன ஆய்விற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பினேன். **(TN 57 CA 7683 என்ற பதிவெண்கொண்ட மகேந்திரா XUV என்ற காரின் மோட்டார் வாகன ஆய்விற்கான வேண்டுகோள் கடிதம் அ.த.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது) மேலும், அன்றைய தினமே** இறந்துபோன நபர் ஓட்டி வந்த TN 59 AV 0144 என்ற பதிவெண்கொண்ட Passion Pro இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்தேன். (**TN 59 AV 0144 என்ற பதிவெண்கொண்ட Passion Pro இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன**

**ஆய்விற்கான வேண்டுகோள் கடிதம் அ.த.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**)

5. மேலும் மேற்படி இரு வாகனங்களையும் மோட்டார் வாகன ஆய்வு செய்து சான்று வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் சிவக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். ( **TN 57 CA 7683 என்ற பதிவெண்கொண்ட மகேந்திரா XUV என்ற காரின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.11ஆகவும், TN 59 AV 0144 என்ற பதிவெண்கொண்ட Passion Pro இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.12ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் 16.10.2025ம் தேதி இவ்வழக்கில் இறந்து போன லெட்சுமணன் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து சான்று வழங்கிய நத்தம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.பிரவீன்குமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **(லெட்சுமணன் என்பவரது பிரேத பரிசோதனை அறிக்கை அ.த.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) மேலும், பிரேத பரிசோதனை அலுவலாக நியமிக்கப்பட்ட தலைமை காவலர் டோம்னிக் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 16.10.2025ம் தேதி எதிரி பாலாஜி என்பவர் மீது சட்டப்பிரிவுகள் 281, 106(1) BNS பிரிவுகளின்படி குற்ற இறுதி அறிக்கையை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

6) அ.சா.1 அடைக்கம்மாள் கொடுத்த புகார் மனுவை யார் எழுதினார்கள் என்று விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். முதல் தகவல் அறிக்கை ஆனது 5 நாட்கள் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தானது விளாம்பட்டி பிரிவில் இருந்து கிழக்கிலிருந்து மேற்காக சாலையின் குறுக்கே சென்றபோது ஏற்பட்டது என்பது தெரிய வருகிறது என்றால் சரிதான். நத்தம் டு மதுரை நான்கு வழி

தேசிய நெடுஞ்சாலையில் கிழக்கு பக்கமாக விளாம்பட்டி பிரிவு அமைந்துள்ளது என்றால் சரிதான். நான்கு வழி தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள சென்டர் மீடியனின் உடைக்கப்பட்ட பகுதி ஆனது விளாம்பட்டி பிரிவிலிருந்து 30 அடி தூரத்தில் உள்ளது என்றால் சரியல்ல 10 அடி தூரத்தில் உள்ளது. உடைக்கப்பட்ட சென்டர் மீடியன் பகுதி ஆனது தென் வடலாக 30 அடிக்கு உடைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சென்டர் மீடியனின் தென்பகுதியில் சென்றபோதுதான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7) இறந்து போன நபர் ஓட்டி சென்ற இருசக்கர வாகனம் சென்டர் மீடியனில் உடைக்கப்பட்ட பகுதியில் தென்புறம் 40 அடி தூரம் கிழமேலாக ரோட்டை கடந்துள்ளார் என்றால் சரிதான். சென்டர் மீடியன் உடைக்கப்பட்ட பகுதி வாகனங்கள் குறுக்கே கடந்து செல்வதற்கு பேரிக்கார்டோ வேறு வசதிகளோ செய்யப்படவில்லை என்றால் சரிதான். நத்தம் டு மதுரை செல்லக்கூடிய தேசிய நெடுஞ்சாலையில் வரும் நபருக்கு சென்டர் மீடியன் உடைக்கப்பட்ட பகுதி தெரியாது என்றால் சரியல்ல. விளாம்பட்டி பிரிவு வடக்கு புறமாக மூன்று, நான்கு வீடுகள் உள்ளது என்றால் சரிதான். விளாம்பட்டி பிரிவின் தென்புறமாக ஃபாஸ்ட் ஃபுட் உணவகம் உள்ளது என்றால் சரியல்ல. நான்கு வழி தேசிய நெடுஞ்சாலைக்கு தென்புறம் டீக்கடை மற்றும் பேக்கரி உள்ளது என்றால் இல்லை. விபத்து நடந்த பகுதிக்கு அருகே மேற்படி வீடுகள் மற்றும் கடைகள் உள்ளது என்றாலும், நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிடவில்லை என்பதால் தான் மேற்படி விபரங்களை குறிப்பிடவில்லை என்றாலும், சென்டர் மீடியன் உடைக்கப்பட்ட பகுதி மற்றும் அதன் அமைப்பு குறித்து சரியாக சொல்ல இயலவில்லை என்றாலும் சரியல்ல.

8) பிரேத பரிசோதனை அறிக்கையானது இரு பக்கங்களுக்கு தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரேத பரிசோதனை ஆனது சட்டப்படியான வகைகளுக்கு உட்பட்டு நடத்தப்படவில்லை என்பதால் அந்த

அறிக்கை ஏற்றுக் கொள்ளக் கூடியது இல்லை என்றால் சரியல்ல. விபத்து பதிவேட்டில் சார்பு ஆய்வாளர் இறந்து போன நபரை கொண்டு சென்றதாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும், அந்த சார்பு ஆய்வாளரை நான் விசாரிக்கவில்லை என்றாலும் சரிதான். பிரேத விசாரணை அறிக்கையில் பஞ்சாயத்தார்கள் நத்தம் – மதுரை பைபாஸ் ரோட்டை கடப்பதற்காக கிழக்கிலிருந்து மேற்காக இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றபோது விபத்து ஏற்பட்டதாக தெரிவித்துள்ளார்கள் என்றால் சரிதான். எதிரி ஓட்டி சென்ற வாகனமும், இறந்து போன நபர் ஓட்டி சென்ற வாகனமும் மூன்று நாட்கள் காலதாமதமாக வாகன தணிக்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று சாலையில் வாகனத்தின் டயர் மார்க், ஸ்கிட் மார்க் ஆகியவை குறித்து குறியீடு செய்ய மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களை சம்பவ இடத்திற்கு வர சொல்லி கடிதம் எதுவும் வைக்கப்பட்டதாக இல்லை என்றால் சரிதான்.

9) இறந்து போன நபரின் ஆர்சி புக், வாகன ஓட்டுனர் உரிமம் மற்றும் இன்சூரன்ஸ் போன்ற ஆவணங்களை பெற்று மோட்டார் வாகன ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததாகவும் அருகில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் கொடுக்கப்படாத காரணத்தினால் தான் மோட்டார் வாகன ஆய்வாளர் மேற்படி இருசக்கர வாகனத்தை அவர் வசம் வைத்துக்கொள்வதாக தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் பணம் செலுத்தி மேற்படி இறந்து போன நபர் சென்ற இருசக்கர வாகனம் பெற்றுக் கொண்டதாக வாகனங்கள் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். விளாம்பட்டி பிரிவில் இருந்து தேசிய நான்கு வழிச் சாலையில் கிழக்கிலிருந்து மேற்காக குறுக்கே செல்வதற்கு எந்தவித பிரிவும் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரிதான். இறந்து போன நபரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால்தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. நான் சொல்லும் விதத்தில் வழக்கு சம்பவம் எதுவும்

**நடைபெறவில்லை என்றாலும் எதிரியின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றாலும் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.**

**<u>மறு விசாரணை</u>** : இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.04.08 14:50:08 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்